அய்யன் பிக்சர்ஸ்
அளிக்கும்
எவர்கிரீன் புரொடக்ஷன்ஸ்
ரதனமஞ்சரி
டைரக்ஷன்
ஹுன்சூர் கிருஷ்ணமூர்த்தி
தயாரிப்பு... பவானி மணி
Arts & Coy

அய்யன் பிக்சர்ஸ் அளிக்கும்...

எவர்க்ரீன் புரொடக்ஷன்ஸ்

ரத்ன மஞ்சரி

நடிகர்கள் :

உதயகுமார்	ஹரிணி
நரசிம்ம ராஜு	ராஜ்ஸ்ரீ
அஸ்வத்	ஜயஸ்ரீ
சிவசங்கர்	லட்சுமிதேவி
	லீலாவதி

மற்றும் பலர்.

ஒலிப்பதிவு : டி. மோகனசுந்தரம்

ஒளிப்பதிவு : மது

எடிட்டிங் : P. S. மூர்த்தி

நடனம் : A. K. சோப்ரா, ரத்னகுமார்

வாள் பயிற்சி :

சிவய்யா

உதவி :

S. கோவிந்தராஜன்

பின்னனி :

P. B. ஸ்ரீனிவாஸ், S. C. கிருஷ்ணன்,
சுசீலா, L. R. ஈஸ்வரி, சூலமங்கலம் ராஜலட்சுமி,
S. ஜானகி, P. லீலா.

ரத்ன மஞ்சரி

(கதை சுருக்கம்)

Vallavaraaj

ஏகநாதரின் தியானத்தைக் கெடுத்ததால் சாபமடைகிறார்கள் மூன்று நாக கன்னிகைள். அதில் ஒரு நாககன்னிகை நக்ஷத்திரமாக மாறி சந்திரகிரி ராணியின் கர்ப்பத்தில் கலக்கிறாள். நாககன்னிகையின் தந்தை நடந்ததை அறிந்து ஏகநாதரை மாடாகச்சபித்து விடுகிறார். ஏகநாதரின் மகனுக்கும் சாபம் கொடுக்கிறார்.

சந்திரகிரி ராணிக்குப் பெண்குழந்தை பிறக்கிறது. சோதிடர்கள் அரசனிடம் பிறந்தகுழந்தை உயிருடன் இருந்தால் அரசன் உயிருக்கு ஆபத்து, அரசன் இறந்தால் குழந்தை சிரஞ்சீவியாக இருக்கும் என்று வருத்தத்துடன் சொல்கிறார்கள்.

மாங்கல்யமா ?—மகளா—? ராணியின் மனம் குழம்புகிறது.! மாங்கல்யத்தை இழக்க எந்த மங்கையாவது விரும்புவாளா!—குழந்தையைக்கொல்லத் தீர்மானிக்கிறாள் ராணி. குழந்தை கொல்லப்படுகிறது.

அரசன் ராணியின் செய்கையைக்கண்டு வருந்துகிறான்.-'தாய்' என்ற உணர்ச்சியில்லாமல்—நடந்து கொண்டாயே அநியாயமாக குலவிளக்கை அணைத்துவிட்டாயே என்று வருந்துகிறான்.

உணர்ச்சி வசப்பட்ட ராணியின் குழப்பம் தெளிகிறது. அதற்குள் முன்யோசனையுள்ள சேடியொருவளின் சமயோஜித புத்தியால் குழந்தை காப்பாற்றப்பட்டு - ஊஞ்சலில் வேறு பொம்மைக் குழந்தை கிடத்தப்படுகிறது. இதையறிந்த மன்னனும் — ராணியும் மகிழ்கிறார்கள். ஆனால் !

சோதிடர் முடிவுப்படி மன்னன் மறைகிறான். ஏகநாதரின் மகன் ஜயகீர்த்தி குருகுலத்தில் கல்விபயிலச் செல்கிறான். குருகுலத்தில் குரு சிவானந்தரின் மகள் ஜயகீர்த்தியின் மேல் காதல் கொள்கிறாள். அவனை அடைய முயற்சிக்கிறாள். முயற்சி வீணான கோபத்தில் தந்தையிடம் முறையிடுகிறாள். தந்தை அவனை ஆசிரமத்தை விட்டு விரட்டுகிறார்.

ஜயகீர்த்தி தன் தாயை சந்திக்கிறான். நண்பன் மன்மதனுடன் சந்திரகிரி நாட்டுக்கு வருகிறான். விதியின் விளையாட்டில் மந்திரிகுமாரன் சிந்தாமணியாக நடிக்கும்படி சூழ்நிலை உருவாகி இளவரசி ரத்னாவையும் மணக்கிறான் இரவு! தன்னை மாலையிட்டவன் மந்திரியின் முட்டாள் மகனல்ல என்பதையறிந்து ரத்னா ஆறுதலடைகிறாள்.

மார்த்தாண்டன் என்ற மந்திரவாதி மஞ்சரியை தன் மந்திர சக்தியினால் வரவழைத்து தன் கொடிய விளையாட்டுகளுக்கு பகடையாக்கிக் கொள்கிறான்.

மஞ்சரி சந்திரகிரி மாளிகைக்கு வந்து ஜயகீர்த்தியிடம் மீண்டும் தன் காதலை வெளியிட்டு ஏற்றுக்கொள்ள வேண்டுகிறாள். ஜயகீர்த்தி மறுக்கிறான். கோபம்கொண்ட மஞ்சரி விஷப்பாம்பாக மாறி ஜயகீர்த்தியை கடித்து விட்டு மறைகிறாள்

விஷம் ஜயகீர்த்தியின் அழகான உருவத்தை மாற்றி பயங்கர உருவாக்கி விடுகிறது. மாலையிட்ட ரத்னாவினாலும்—நண்பன் மன்மதனாலுமே ஜயகீர்த்தியை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

மஞ்சரி ஜயகீர்த்தியை குகைக்கு அழைத்துக் செல்கிறாள்.

நண்பனைத் தேடிச்சென்ற மன்மதன் மந்திரவாதியின் குகையில் ஒரு பெண்ணின் தலையைக்கண்டு நடுங்குகிறான். ஆனால் அந்த தலை சொன்ன முறையில் நடந்து அந்த பெண்ணுக்கு உயிரூட்டுகிறான். அவள் மன்மதனுக்கு மந்திரசக்தியுள்ள மாயமோதிரத்தைக் கொடுக்கிறாள்.

உதயகிரி ராணி மங்களாவின் மேல் மோகம்கொண்டு தன் குகைக்கு வரவழைக்கிறான் மார்த்தாண்டன். இது மஞ்சரிக்குப் பிடிக்கவில்லை.

சிவானந்தரின் உதவியால் ரத்னா மீண்டும் ஜயகீர்த்தியை அடைகிறாள். இருவரும் உதயகிரி வருகிறார்கள்.

உதயகிரி மன்னர் மனைவியைக் கண்டுபிடிக்க ஜயகீர்த்தி புறப்படுகிறான்.

குகையில் மங்களா—மஞ்சரி—மந்திரவாதி

ஜயகீர்த்தி நண்பனின் மனைவியை மீட்டானா-?

மஞ்சரி என்ன ஆனாள் ?

மங்களா என்ன ஆனாள் ?

ஆட்சியைக் கைப்பற்ற திட்டமிட்டு சதிசெய்யும் மந்திரி என்ன ஆனான் ?

விடை வெள்ளித்திரையில்

பாடல்கள்.

இயற்றியவர்: புரட்சிதாசன்.

பாடியவர்: சூலமங்கலம் ராஜலக்ஷ்மி

அருள் பெருக கலை சிந்த
அழகு பொங்கிடக் கண்டேன்
பெருமையுள்ள கம்பன் தமிழ்
கைவண்ண மலர்கண்டேன்

நெடுமாறன் சந்ததியில்
உயிரான குலக்கொடியோ
நிறை பெண்மை விளக்காக
வாழ்கின்ற விண்மதியோ

வெற்றியிலே இசை நிலவும்
வெண்முகத்தில் எழில் தழுவும்
முத்தியதன் தாள் கொண்ட
சிந்தையிலே நீ வளர்க

நூராண்டு வயதிருந்து
அறஞ் செய்து அரசுகண்டு
பாராண்டு வாழ்ந்திருந்து
உன் புகழை நிலைநிறுத்து

பாட்டு 2

இயற்றியவர்: புரட்சிதாசன்.

பாடியவர்: பி. பி. ஸ்ரீனிவாஸ்.

ஒருவன் வந்தான் ஒருவன் போனான்
நடுவில் நின்றவன் அழுதான் சிரித்தான்
வாழ்ந்தவன் உட்கார்ந்தான்
வாலிபன் நடக்கின்றான்

இரவு பகல் வருகிறது
ஏதேதோ நடக்கிறது
நெடுநாள் உலகம் பார்க்கிறது
நிம்மதி இழந்து இருக்கிறது

பாட்டு 3

இயற்றியவர்:

பாடியவர்: பி. லீலா.

ஸ்லோகம்

யா வித்யா சிவ கேசவாதி ஜனனீ யாவை ஜகன்மோ ஹனீ
யா ப்ரும்மாதி பிபீலிகாந்த ஜகதானந்தைக ஸந்தாயனீ
யா பஞ்ச ப்ரணவ த்விரேப நளினீ
யா சித் களாமாலினீ
ஸாபாயாத் பரதேவதா பகவதீ
ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரீம்

பாட்டு 4

இயற்றியவர் :
புரட்சிதாசன்.

பாடியவர் :
பி. லீலா.

அமுதமே கிடைத்தது என்று
நான கண்ட ஆனந்த நினைவு
புகுந்துவிட்ட மின்னலுக்கு
பலியாகியும் போனதய்யா

தாரை வார்த்த நீர் இன்னும்
துளிகூட உலரவில்லை
அச்சதைகள் இட்டதும்
சிரிதேனும் உதிரவில்லை

கட்டிவைத்த கங்கணத்தை
கழற்றவுமில்லையே இதற்குள்ளே நானும்
விதவையோ அம்மா
உன்னை போற்றிய கை வளை இழப்பதா

அணிந்த மஞ்சள் அவலமுற்று
குங்குமத்தை இழப்பதா
சரணமடைந்தவள் அமங்கலியா என்தாயே
தருணமிதில் காப்பதுனது சக்தி தாயே
அருளே கதிநீ அணங்கே

பாட்டு 5

இயற்றியவர் :
புரட்சிதாசன்.

பாடியவர்கள் :
எஸ். சி. கிருஷ்ணன்,
எல். ஆர். ஈஸ்வரி.

பெண் : யாரு யாரு நீ யாரு நீ
எங்கே வந்தே எந்த ஊரு
உயிர்மேலே உனக்கு
ஏதேனும் கவலெ
உண்டா இல்லையா கூறு

ஆண் : யாரு யாரு நீ யாரு—என்னை
இப்படிப் பாத்து பதில் கூறு
இங்கென்ன இருக்கு
பயமென்ன இருக்கு—அதை
எங்கே கொஞ்சம் இரக்கு

பெண் : மேலே பாரு நான் யாரு

ஆண் : யாரு

பெண் : நான்தானய்யா

ஆண் : மிச்சம் எங்கே

பெண் : ஓடிப்போவியா கண்ணு—இதோ
உனக்கு முன்னாலே பொண்ணு

ஆண் : அய்யய்யய்யய்யோ......பூதந்தான் இது
பாடி ஏய்க்கிது
புடிச்ச உடனே திங்கப்பாக்குமே

பெண் : அய்யோ ராஜா சும்மா நடுங்காதேப்பா
எனது பேச்சைக்கேளு

ஆண் : யாரு......யாரு

பெண் : தேவகன்னி நானய்யா—என்னை
காக்க வேண்டுகின்றேனய்யா

ஆண் : தேவகன்னியோ சாபகன்னியோ
ஏவல் பில்லியோ அறியேன்

பெண் : ஹ......ஹ......ஹ......
மனிசனுட்டம் இரு மயங்காம இரு மாலைபோடவழிபாரு

ஆண் : ஹா
மூஞ்சி முழிக்குதிங்கே
முண்டம்துடிக்குதிங்கே
மணப்பெண் யாரு—அதைக்கூறு

பெண் : அய்யோ ராஜா
என்னைப்பாரு தலையை
முண்டத்தோட சேரு

ஆண் : யாரு யாரு நீ
யாரு யாரு நீ யாரு
எங்கே வந்தே எந்த ஊரு

பெண் : பலன்—இப்படி இருக்கு
நட—பயந்துகிடக்கு

ஆண் : இனி கவலை எதுக்கு உனக்கு

பாட்டு 6

இயற்றியர்:
புரட்சிதாசன்.

பாடியவர்:
சுசீலா.

கண்ணே என்று சொல்லு—இரு
கண்ணால் என்னை கிள்ளு
ஜோடி தன்னை நாடும் மைனா
இன்னும் கொஞ்சுமோ—இது
என்றும் அஞ்சுமோ
ஆசை என்று தேடும் கலை
அங்கு நின்று ஆடும்
புதுமைகள் ஏந்தும் இமையுடன் நீந்தும்
பூவையின் முகத்தை பாராயோ
நேசமே பெருக நெஞ்சமே இறுக
நாடும் கன்னியின் கலி தீராய்
இந்நங்கை செங்கனி

சித்திர மோகன பதுமை
சிந்தையில் ஆயிரம் உரிமை
பனித்துளி என்ற மணிகளில் நின்ற
பாவையின் கனவை அமுதாக்கு—இந்த
பைங்கிளி நினைவை அமுதாக்கு
புன்னகைச் செண்டு பூரிப்பதுண்டு
பொன் வண்டு வந்தால் தேனுண்டு
இந்நங்கை செங்கனி

பாட்டு 7

இயற்றியவர் : **புரட்சிதாசன்.**

பாடியவர் : **பி. லீலா**

துன்ப நெடுங்கடலடியில்
நான் மூழ்கி திணறினேனே
பண்புடனே அங்கு வந்த
அன்பல்லவோ

எமனுடனே போராடி
என் மஞ்சள் கயிர் தன்னை
உயிர் கொள்ளச் செய்திட்ட
தாயல்லவோ

அன்று தோன்றிய கருணை
இன்றெங்குபோனதம்மா
நித்தந்தொழுது நின்று
பூஜித்து வந்த தன்மை
பொய் எனவே வழி மாறி
புகைந்ததுவோ பார் அம்மா
பேதை என் முறைகேட்டு
காத்தருள் அம்மா
காப்பாற்று அம்மா
பார்த்தருள் அம்மா

பாட்டு 8

இயற்றியவர் : **புரட்சிதாசன்.**

பாடியவர் : **ஜானகி.**

கிலிகிலி கிலக்கு
கால் சலங்கை ஜனக்கு
கை வளையல் டனக்கு
ஹா ஹா ஹா

அன்னத்தாரா அசைந்து
ஆடுகின்ருள் இசைந்து
இன்னுமென்ன தயக்கம்
ஏன் நாணமோ
கன்னி எந்தன் காதலிங்கு
வீணுகுமோ

உன்னை நாடி இங்கு வந்த
தேன் முல்லேயே
புன்னகையில் காணுதற்கு
கண் கொள்ளாதே (அன்னத்தாரா)

ஆசை என்ற அன்பு மிஞ்ச
நேசங்கொண்ட நெஞ்சு பொங்க
கலேயானதோ காதல்
கடலானதோ

தஞ்சமென்று கொஞ்ச வந்து
கெஞ்சுகின்ற உண்மை இன்று
புரியாததோ—இல்லே
புலனுனதோ

முத்துப்போல சிரித்து
முகங்கண்டு வளேத்து
மகிழ்ந்து பூரிக்க
வெடகமாகுதோ

கண்ணு செய்த தளுக்கு
கனிவுள்ள பிணக்கு
மினுக்குள்ள குலுக்கு
தீதாகுமோ
சின்னத்தாரா எண்ணுவது
வீண்போகுமோ (அன்னத்தாரா)

சிட்டு ஜாதிக் கன்னிப்பொண்ணு
தெய்வப்-பொண்ணு பச்சைப்பொண்ணு
மயிலல்லவோ கூவும்
குயிலல்லவோ

திட்டமிட்டுக் கிட்டவந்த
செந்தாழம்பூவைக் கென்ன
அருளில்லேயோ—பார்க்க
அழகில்லேயோ

கொட்டு மேளம் அடித்து
தாலிகட்டி அணேத்து
மகிழ்ந்து வாழ்வித்தல்
எந்த நாளய்யா ? (அன்னத்தாரா)

பாட்டு 9

இயற்றியவர் : பாடியவர்கள் :

புரட்சிதாசன். **சுசீலா குழுவினர்.**

கோவைச் செவ்விதழ் கனிந்ததடி—இளங்
கொம்புத் தேன்மலா திறந்ததடி
அன்பு வெள்ளத்தில் நீராடி—தன்
துன்பத்தை நீக்க எண்ணுதடி (கோவை)

ஆசை தருங்கதை நமதாகும்—கண்
அசையும் காதலுக்கிணையாகும்
ஆனந்த மானது ஒன்றும் அது
வாழ்க்கையின் சுவையுள்ள இளம்பருவம் (கோவை)

உயிருள்ள துணையுள்ள பூஞ்செடிகள்—இளங்
காதலின் யௌவன குலக்கொடிகள்
இனித்திடும் கலைகளும் மேன்மைபெற—இசை
வஞ்சியர் மனதிலே ஒளிதோன்ற (கோவை)

பாட்டு 10

இயற்றியவர் : பாடியவர் :

புரட்சிதாசன். **பி. பி. ஸ்ரீனிவாஸ், லீலா குழுவினர்.**

போற்றுவோம் வழி தாராய்
வாழ்த்துவோம் துயர் தீராய்
போற்றுவோம் வாழ்த்துவோம்
உன்னை நம்பினேன் காக்க வருவாய் நேசா

அருள்வாய் ஆதிசேஷா
அருள்வாய் சிவனின் நேசா
கருணை முகதேவனே பலனளிப்பாய் (அருள்)

பந்த பாசங்களில் நலன் கொடுப்பாய்
பக்தி வெற்றி பெற கண்திறப்பாய்
உன்னை போற்றியவர் வாழ்ந்திருந்தார்
உலகமுள்ளவரை தழைந்திருந்தார் (அருள்)

நொந்து போனவன் முறைகேளாய்
வந்து பார்த்து என் கலி தீராய்
தந்தை சாபம் விடுதலை பெறவே
தனயன் வாழ்க்கையும் கனிந்திடவே (அருள்)

வித்தை என்பது சக்தி கொண்டது
வெற்ற என்ற வழி எங்கே?
பக்தர் நாடும் அருள்கொண்ட
சித்திதரும் முக்திகொண்ட
வழி எங்கே? (அருள்)

அய்யன் பிக்சர்ஸ் அளிக்கும்...

எவர்க்ரீன் புரொடக்ஷன்ஸ்

ரத்ன மஞ்சரி

கதை : ஹுன்சூர் கிருஷ்ணமூர்த்தி

வசனம் : K. தேவநாராயணன்

பாடல்கள் : புரட்சிதாஸன்

இசை : ராஜன், நாகேந்திரா

ஸ்டுடியோ : கோல்டன், மதராஸ்

டைரக்ஷன் :

ஹுன்சூர் கிருஷ்ணமூர்த்தி

தயாரிப்பு :

பவானி மணி

எதிர்பாருங்கள்!

எமது அடுத்த தயாரிப்பு

?

அய்யன் பிக்சர்ஸ்,

மாதவபாக் No. 1, லஸ் சர்ச் ரோட்,

சென்னை-4.

ஹரிஹர அச்சகம், வேலூர்.—போன் 356